68—

வட்டாரப் போக்குவரத்து அலுவலகம்

***34759—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அந்தியூர் தொகுதி, அந்தியூரில் புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) அந்தியூரில் போதிய வாகனங்கள் இல்லாததனால், புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* Courage, generosity, wisdom and zeal are the four essential elements of a successful Leader *என்ற கூற்றிற்கிணங்க, எதற்கும் அஞ்சாமை, பிறருக்குக் கொடுக்கும் ஈகைக் குணம், அறிவாற்றல், ஊக்கம் என்கிற பண்புகளைப் பெற்று, நாட்டு மக்களுக்கு அறிவித்த அத்தனைத் திட்டங்களையும் நிறைவேற்றிக் கொடுத்த ஒரே முதலமைச்சரான மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தியூர் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான 2 சக்கர வாகனங்கள் மற்றும் 4 சக்கர வாகனங்கள் அதிகமாக உள்ளன. மேலும், தனியார் பள்ளி வாகனங்கள், பேருந்துகள், லாரிகள் என ஆயிரக்கணக்கான

2016 பிப்ரவரி 18]

வாகனங்கள் உள்ளன. மாண்புமிகு அம்மா அவர்கள் அந்தியூரைத் தனி வட்டமாக அமைத்துக் கொடுத்ததன் பயனாக, புதிய தொழிற்சாலைகள் தொழில்முனைவோர்களால் ஆரம்பிக்கப்பட்டு, அவர்களுடைய தொழிற்சாலைகளுக்குச் செல்லும் வாகனங்களும் அதிகமாகி உள்ளன. மேலும், பர்கூர் மலையோர கிராமங்களில் மலைவாழ் மக்கள் 15,000 பேர்கள் வசிக்கின்றனர். அவர்கள் தங்கள் வாகனங்களைப் பதிவு செய்யவும், சாலை வரி மற்றும் ஓட்டுநர் உரிமம் பெறவும் 2 நாட்கள் காத்திருந்து 100 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பவானிக்குத்தான் செல்ல வேண்டிய நிலை உள்ளது. எனவே, இப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கைப்படி, அந்தியூரில் துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கப்பட வேண்டுமென்றால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள்தொகை, போக்குவரத்து வாகனங்கள், அதேபோல, போக்குவரத்து அல்லாத வாகனங்கள் மற்றும் ஏற்கெனவே இருக்கிற வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கும் இடையே இருக்கின்ற தூரம்; இவற்றையெல்லாம் கணக்கில் கொண்டுதான் புதிய வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கப்படுகின்றது. ஒரு வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைக்கப்பட வேண்டுமென்றால், போக்குவரத்து வாகனங்கள் 7,500 இருக்க வேண்டும். பகுதி வட்டார போக்குவரத்து அலுவலகம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், 2,500 இருக்க வேண்டும். அந்தியூர் பகுதியிலே 1962 வாகனங்கள்தான் இருக்கின்றன. 17 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள பவானிக்கு அருகில் பகுதி அலுவலகம் இருக்கின்றது. வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் 23 கிலோ மீட்டர் தொலைவில்தான் இருக்கின்றது. ஆகையால், எதிர்காலத்திலே வாகனங்களுடைய எண்ணிக்கை அதிகமாகின்றபொழுது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய

[2016 பிப்ரவரி 18

கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். ரமணீதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2016–ல் மீண்டும் அமையும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில், எங்கள் பகுதிக்கு முன்னுரிமை கொடுத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, நன்றி கூறி அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

திரு. ம. குணசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத்திலே வாழ்ந்து கொண்டிருக்கின்ற அனைத்துத் தமிழர்களுக்கும் தலைவராக விளங்கிக் கொண்டிருக்கின்ற, ஒப்பற்ற தலைவராக விளங்கிக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதியில் அரசுப் போக்குவரத்துப் பணிமனை சிப்காட் வளாகத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2001 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பிலே அமர்ந்தபொழுது, அந்த சிப்காட் வளாகத்தில் ஓர் அரசுப் போக்குவரத்துப் பணிமனையை அமைத்து, அதற்குக் கட்டடம் கட்டப்பட்டு, அங்கே அந்தப் போக்குவரத்துப் பணிமனை இயங்கி வருகிறது. கடந்த கால மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபொழுது, அந்தப் பணிமனையிலே இருந்த* Petrol bunk*–ஐயும்,* Mechanic shed*–ஐயும் மூடி விட்டார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மானாமதுரை சிப்காட் வளாகத்திலே இயங்கிக் கொண்டிருக்கின்ற அரசுப் போக்குவரத்துப் பணிமனையில், மீண்டும்* Petrol bunk*–ஐயும்,* Mechanic shed*–ஐயும் அமைத்து, கூடுதலாகப் பேருந்துகளை ஒதுக்கி, முறையாக அரசுப் போக்குவரத்துப் பணிமனை செயல்படுவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2016 பிப்ரவரி 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது பணிமனையைப் பற்றி; மூலக் கேள்வி வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் பற்றியது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

திரு. மு.வீ. கருப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட அலங்காநல்லூர் பகுதியில் போக்குவரத்துப் பணிமனை அமைப்பதற்காக 2013–ல் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான இடம் தேர்வு செய்யப்பட்டது. அந்த இடம் பொதுப் பணித் துறைக்குத் தேவைப்படுகின்ற காரணத்தினால், மாற்று இடம் பாருங்கள் என்று சொல்லப்பட்டது. மாற்று இடம் பார்க்கின்றபோது, மாற்று இடங்கள் குறைவாக இருக்கின்றன. அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், வாடகை ஒப்பந்தத்தில் போக்குவரத்துப் பணிமனையை அமைப்பதற்கு முன்வருவார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் மற்றும் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–55

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களே பேசுகின்றபோது, மாற்று இடம் குறைவாக இருக்கின்றது; எனவே, வாடகைக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்கின்றார். போக்குவரத்துப் பணிமனை என்பது வாடகைக் கட்டடத்திலே இயங்குவது என்பது இயலாத காரியம். ஏனென்றால், அதற்கு 2 ஏக்கர் நிலம் வேண்டும்; பல்வேறு வசதிகள் வேண்டும் என்ற காரணத்தினால், வேறு

இடத்தினைத் தேர்வு செய்து மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 69, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

69—

சார்–பதிவாளர் அலுவலகக் கட்டடம்

*__37259—திரு. செ. காமராஜ்:__

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணராயபுரம் தொகுதி, கிருஷ்ணராயபுரத்திலுள்ள சார்–பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணராயபுரம் சார்–பதிவாளர் அலுவலகத்திற்கு அரசுக் கட்டடம் கட்ட நிருவாக அனுமதியும், நிதி ஒதுக்கீடும் செய்து ஆணை வழங்கப்பட்டு, தற்போது கட்டடம் கட்டும் பணி நடைபெற்று வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ் அவர்கள்.*

திரு. செ. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிருஷ்ணராயபுரம் பேரூராட்சியில் உள்ள சார்—பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட,*